ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

**வைதண்டிகன்:—** பண்டிதரே ! நடக்கக்கூட சக்தியில்லைபோல் காணப்படுகின்றதே. பலம் குறைந்ததற்குக் காரணம் யாது ?

**பண்டிதன்:—** நான்குநாளாய் ஜ்வரமதிகமாயிருந்தது. ஒருநாள் ஜ்வரம் 6-மாதத்திலேரின பலத்தைக் குறைத்துவிடுமன்றோ ! அதனால் இப்பொழுது கொஞ்சம் சக்தி குறைவுதான்.

**வைதண்டிகன்:—** அது மாத்திரமல்ல பாலிகாவிவாஹத்தினாலேயே பாரதமக்களுக்குப் பலம் குன்றிவிட்டது. அதை நம் இந்தியர்கள் கவனிப்பதுமில்லை. சொன்னாலும் கேட்பதுமில்லை

**பண்டிதன்:—** ஒரு நாளும் பாலிகா விவாஹத்தால் பலம் குறைந்துவிடாது. ஆனால் உன்போலியவர்க்கு புத்திமோஹமேயன்றி வேறில்லை. பாலிகாவிவாஹம் செய்யாமல் பிரௌடாவிவாஹத்தையே வம்சபரம்பரையாகச் செய்து வருபவர் நம் இந்தியாவில் பலவகுப்புக்காரரிருக்கிறார்கள் அந்த விவாஹம் செய்துகொண்ட தம்பதிகளுக்குப் பிறந்த சிசுக்களும் மிக மெலிந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இயற்கையாகவே பிரதி வருஷத்திலும் சீதகாலத்தில் பலமதிகப்படுவதும், உஷ்ணகாலத்தில் குறைவதும் காலவசத்தால் ஏற்படுவதுபோல் கலிகாலக்கொடுமையால் எல்லோருக்குமே பலம் குறைந்து கொண்டுதான் வருகிறது அதற்குக் காலம் காரணமேயன்றி பாலிகா விவாஹம்காரணமில்லை. அன்றியும்"கட்டு முளைக்குத் தேள் கொட்டக் கரக்கப்போனவளுக்கு நெறி கட்டித்தாம்" என்றபடி பிராமணஜாதியார் செய்யும் பாலிகாவிவாஹத்தால்மற்றவருக்கு பலம் குறைந்துவிட்டதாகக் கூறுவதுமிருக்கிறது. முன் யுகங்களில் நம் நாட்டுப்போர்வீரர்கள் போட்டுக்கொண்ட கவசம் காக்ஷி சாலைகளில்வைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தூக்க இப்பொழுதுள்ள வீரர்களால் முடியுமா? "மாங்குடிமுண்டன்" என்றுப் பிரசித்தமான பிராமணஜாதி வகுப்பாரை நீ பார்த்ததில்லைபோலும். இனி அந்த எண்ணத்தை விட்டுவிடு. இது சிறுவர்களை ஏமாற்றவல்லவா கற்பிக்கப்பட்ட விதண்டாவாதம். அதை விட்டுப் பண்டிதர் சொற்படி கேள்.

***   ***   ***   ***

**சிறுவன்:—** பெரியவரே ! ஜாதிபேதம் பாராட்டுவது சண்டைக்கு காரணமல்லவா ! அதை ஆதரிப்பது ஆன்றோருக்கழகா ?

**பெரியார்:—** சண்டைக்குக் காரணம் ஜாதிபேதமில்லை. ஒரே தகப்பனுக்கு ஒரே தாயின் வயிற்றில் ஜனித்த சகோதரர்கள் சொத்துக்காகச் சண்டையிட்டுக்கொண்டு கோர்ட்டு வாசலுக்குப் போகிறார்களே ஆங்கு ஜாதிபேதமாகாரணம்? பல வகுப்பினர் சேர்ந்து ஒற்றுமையாய் கம்பெனியை நடத்திஅன்யோன்ய நேசமுள்ளவர்களாகக் காணப்படுகிறார்களே, அங்கு ஜாதிபேதத்தால் நேர்ந்த தீமை யாது ? உண்மையுணர்வாயாக.

சுபம் !

பத்திராதிபர்,

# ஆர்யதர்மம்.

## ஆத்தும குணங்கள்

### 3. பொறாமையில்லாமை.

பிறர் தூஷித்தாலும் த்வேஷித்தாலும் மனது விகாரத்தை அடையாமல் பொறுமையுடனிருந்து விட்டாலும் பிறர் அனுபவிக்கும் புருஷார்த்தங்களைப் பார்க்கும்பொழுது ஸஹிக்க முடியாமல் நமக்குமப்படி கிடைக்கவில்லையே என்று அஸூயை (பொறாமை) மேலிட்டு த்வேஷிக்கும்படியும் தோன்றிவிடும். அது கூடாது. அதுதான் அனஸூயா (பொறாமையில்லாமை) யெனப்படும். அங்ஙனமே பிருஹஸ்பதி--

यो धर्ममर्थं कामं वा लभते मोक्षमेव वा ।
न द्विष्यात्तं सदा प्राज्ञ स्साऽनसूया स्मृता बुधैः ॥

"யாதேனுமொருவன் தர்மத்தையாவது, அர்த்தத்தையாவது, காமத்தை (விஷயசுகத்தை) யாவது மோக்ஷத்தையாவது தனது பாக்யவசத்தால் அடைவானேயாகில் புத்திமான் எப்பொழுதும் அவனிடம் த்வேஷத்தைப்பாராட்டக்கூடாது. அதுதான் அனசூயையென அறிஞர் கூறுகின்றனர்" என்று கூறியுள்ளார். எந்த வஸ்துவும் மனோவாக்காயமெனப்படும் முக்காரணங்களால் செய்யப்படும் முயற்சியின்மிருது, தீவ்ரத்தன்மைக்குத்தக்கவாறு அதிகமாகவும், சீக்கிரத்திலும் கிடைக்குமேயன்றி முயற்சியில்லாமலே எவனுக்கும் கிடைக்காது. இப்பிறவியில் ஒருவித பிரயத்னமின்றியே யாரோ ஒருவனுக்குத் திரவியம் முதலியவை கிடைத்ததாகக்கண்டால் முன் பிறவியில் செய்திருந்தபாக்யத்தால் நேர்ந்ததாகக் கொள்ளவேண்டும். இதனாலேயே ஜன்மாந்தரம் (மறுபிறப்பு) உண்டென்று நாஸ்திகனும் நம்ப வேண்டியதாகிறது. எக்காரணமும் இன்றி பொருள்நாசம் முதலிய கஷ்டங்கள் நேரிடின் அதுவும் ஜன்மாந்தர கர்மவசத்தால் ஸம்பவித்ததென சாஸ்திரங்கள்

சாற்றுகின்றன. ஆகவே அவனவன் செய்த புண்யபாபத்திற்குத் தக்கவாறு பரமேசுவரனால் அளிக்கப்படும் சுகதுக்காதிகளை அனுபவிக்கும்பொழுது துவேஷப்படக்கூடாது. சந்தோஷப்படவும் கூடாது. ஒருவன் சுகப்படும்பொழுது நாம் அசூயைப்படுவதனால் அந்த சுகம் நமக்குக் கிடைத்துவிடுமா? நம்மை நிந்தித்தாவது ஒருவன் சுகமடைவதானால் அதை பரமானுக்ரஹமாயல்லவா கிரஹிக்கவேண்டும். காசாலும்பணத்தாலும் சுகப்படுத்த முடியாது. இதையேன் சம்மதிக்கக் கூடாது.

मन्निन्दया यदि जनः परितोषमेति नन्वप्रयत्नजनितोऽयमनुग्रहो मे ।
श्रेयोर्थिनो हि पुरुषाः परितुष्टिहेतोः दुःखार्जितान्यपि धनानि परित्यजन्ति ॥

"என்னை நிந்திப்பதால் ஒருவன் ஸந்தோஷத்தையடைவதானால் ஒருப்ரயத்தினமும் இல்லாமல் எனக்குக் கிடைத்த பரமானுக்ரஹமல்லவா இது. சிரேயஸ்ஸை விரும்பிய புருஷர்கள் துக்கப்பட்டுத் தேடிய பொருளையும் அல்லவா ஸந்தோஷ நிமித்தமாக விட்டுவிடுகிறார்கள். எனக்கு யாதொரு பொருட்செலவையும் வைக்காமல் என்னால் சந்தோஷப்படுவது பெரியதோர் அனுக்ரமே" என்று தன்னை ஒருவன் நிந்திக்கும்பொழுது நினைக்கவேண்டியதாக ஞானங்குசத்தில் உபதேசிக்கப்படுகின்றது. அப்படியிருக்கையில் நிந்தையில் கூட நம்மை சம்பந்தப்படுத்தாமலும் காசையும் பணத்தையும் கேட்காமலும் எவ்விதத்திலும் நம்மிடத்தில் வாராமலும் அவனது பாக்யவசத்தால் சந்தோஷமடைந்து சுகப்படுவானாகில் அதில் துவேஷத்தைப் பாராட்டுவது தகாதகாரியமென்பதில்தடையில்லை அப்படியே ஒருவன் கஷ்டப்படுகையில் "அவனுக்கு இதுவேணும்" என்றும் ஸந்தோஷப்படக்கூடாது. ஸர்வப் பிராணிகளிடத்திலும் தயை வேண்டுமென்றல்லவா-1-வது ஆத்துமகுணத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஒருவன் புருஷார்த்தத்தை யடைந்து ஸந்தோஷப்படுகையில் அஸூயையை அடக்கியும் அடக்கமுடியாமல் போய்விட்டால் "அவன் சுகப்படுவதற்காகச்செய்த ஸாதனத்தை நாம் என் அனுஷ்டிக்கக்கூடாது?" என்று ஸாதனத்தில் அஸூயையைச் செலுத்தி உடனே அதைச் செய்ய ஆரம்பித்து விடவேண்டும். அங்ஙனமே हेतावीर्ष्येत् फले नतु "ஹேதுவில் (ஸாதனத்தில்) பொறாமையடையலாம். பயனில் அடையக்கூடாது" என்று வாக்படாசாரியார் கூறுகின்றார். பிறர் சுகப்படும்பொழுது அவரிடத்

தில் மித்திரபாவத்தைப் பாராட்டவேண்டுமென்று யோக சூத்திரத்தில் கூறப்படுகிறது. அப்படியானல் அவர் அனுபவிக்கும் சுகமெல்லாம் தன்னுடையதாகவே ஆய்விடுமாம். அதெப்படியென்று கேழ்க்கவேண்டியதில்லை. புத்திரன் சுகப்படும்பொழுது அந்த சுகம் தனக்கே நேர்ந்ததாக பாவிக்கப்படுகின்றதல்லவா? அதற்குக் காரணம் புத்திரனிடத்தில் வைத்த ஸ்நேஹமே ஒழிய வேறில்லை. அதுபோல்சுகப்படுவோரிடத்திலெல்லாம்ஸ்நேகத்தைப் பாராட்டினுல் அவ்வளவு சுகமும் தன்னுடையதாகவே ஆய்விடுவதால் அதைவிட்டுப்போட்டுவீணுய் அஸூயைப் படுவதில் பயனேயில்லை. ஸ்நேஹத்தைப் பாராட்டும்பொழுது பிறர் சுகமும் நம்முடையதாகிறது போல் அஸூயைப் பாராட்டுவதிலானுல் அஸூயைப்படலாம். புத்திரனிடத்தில் ஸ்நேஹம் குறைந்துவிட்டால் அவன் சுகப்படுவதே ஸஹிக்கமுடியாமல் போய்விடுகிறது. பிறர் விஷயத்தில் கேழ்க்கவேண்டுமா? அல்லது அஸூயைப்படுவதில் பிறனுக்கு சுகம்குறைந்துபோனுலும்அவனிடமில்லாமற்போனது பற்றி தன்னிடம் வந்ததாக நினைக்கலாம். அப்படிக் குறைவதுமில்லை. ஆகையால் அஸூயைப்படுவதில் கிஞ்சிற்றேனும் பயனில்லை. அத்திய குணத்தைத் தள்ளி சுகப்படுவோரிடம் ஸ்நேக பாவனை செய்து அந்த சுகமும் தன் சுகமெனப்பாவித்து இது அநஸூயை (பொறாமையில்லாமை) யில் வந்த பாக்கியமெனக் கருதி அதைத் தழுவி யாவரும் சிரேயஸ்ஸையடைவார்களாக.

பத்திராதிபர்.

# ஆஹாரநியமம்.

(45-வது பக்கத்தொடர்ச்சி)

இனி உண்ணக்கூடியவைகளையும் அவைகளை உண்ணவேண்டிய பிரகாரங்களையும் தடுக்கப்பட்டவைகளில் சிலவற்றிற்குப் பரிஹாரங்களையும் நிரூபிக்கிறேன்.

आढकीं जीरकं चैव मरीचं सर्षपं तथा ।
राजमाषंमहामाषंश्यामाकं कृष्णमाषकम् ॥
माषं मुद्गं महामुद्गंनिष्पावातिलतिष्यकौ ।
फलानि चूतकदलीपनसानां समाहरेत् ॥

भेदैस्तु कारवल्यादि सर्वं ग्राह्यमितीरितम् ।
क्षुद्रकन्दं महाकन्दमाहरेत्तु विचक्षणः ॥
कदल्यादिषु भेदैस्तु गृह्णीयात्तु प्रयत्नतः ।
कूश्माण्डोर्वारुकं चैव सिंहीव्याघ्री तथैवच ॥
भेदैश्च बृहती सर्वा संग्राह्येत्युच्यते बुधैः ।

वेणुकान्यवान् षाष्टीकान्नीवारान् प्रियंगुं शालाभेदानन्यान्व्रीहीन्वाप्येकजातीयान् । सूरणकन्दक्षुद्रकन्दमहाकन्दवल्लीकन्दशृङ्गिबेरोत्पलकन्दान्यन्यानि च भक्ष्याणि ॥

துவரை, ஜீரகம், மிளகு, கடுகு, மொச்சை, காராமணி, சாமை, கருஞ்சோளம், உளுந்து, பயறு, எள்ளு, தினை முதலிய தானிய வகைகளும் வாழை, பலா, பாகல், கண்டங்கத்திரி, கருணைக் கிழங்கு, பூஷணி, கத்தரிக்காய் முதலியவைகளும் மூங்கிலரிசி, அருவதாங்குருவை, செந்நெல், சம்பாநெல், தினை முதலிய நெல் வகைகளும் சேனைக்கிழங்கு, சக்கரைவெள்ளிக்கிழங்கு இஞ்சி முதலியவைகளும் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவைகளும் உண்ணத்தகுந்தவைகளே. ஸாதாரண தினங்களில் உண்ணக் கூடியவைகளிலும்சிலவற்றைசிராத்தம் முதலிய பித்ருதினங்களில் விலக்கியிருப்பதாலும்

दिवा कपित्थफलकं धानाश्च नच भक्षयेत् ।
सर्वं च तिलसंबद्धं नाद्यादस्तमयं प्रति ॥

பகலில் விளாம்பழமும் நெல் முதலியவைகளை வருத்துப் பொடி செய்தமாவும் ராத்திரிவேளைகளில் எள்ளு ஸம்பந்தப்பட்டவைகளும் உண்ணத்தகாதவைகளென்றும்

एकादश्यां न भुंजीत कदाचिदपि मानवः ।
सूर्यग्रहे तु नाश्नीयात् पूर्वं यामचतुष्टयम् ।
चन्द्रग्रहे तु यामांस्त्रीन् बालवृद्धातुरैर्विना ।

ஏகாதசியில் பகல் இரவு ஒரு வேளையிலும் சாப்பிடக்கூடாதென்றும் சூர்யசந்திரக்கிரஹணங்களில் முறையே நான்கு மூன்று யாமங்கள் முன்னுடி குழந்தைகள் கிழவர்கள் வியாதியஸ்தர்கள் இவர்களைத்தவிர மற்றவர்கள் சாப்பிடக்கூடாதென்றும் சாஸ்திரங்கள் விதிப்பதாலும் சாப்பிடும்படி ஒப்புக்கொள்ளப்பட்டவை

களையும் விதித்த காலத்தை அனுஸரித்தே புஜிக்கவேண்டும். எதை நாம் உண்பதாயிருந்தாலும்

यच्चानिवेदितं सर्वं तत्प्रयत्नेन वर्जयेत् ।
यो मोहादथवाऽऽलस्यादकृत्वा देवतार्चनम् ।
भुङ्क्ते सयाति नरकान् सूकरेष्वपि जायते ।

பகவானுக்கு நிவேதனம் செய்யப்படாததை புஜிக்கக்கூடாதென்றும் அக்ஞானத்தினுலாவது சோம்பலினுலாவது தேவபூஜை செய்யாமல் போஜநம் செய்கிறவன் குரூரமான அனேக நாகங்களை அனுபவித்துப் பிறகு மிகவும் நிஹீநமான பன்றி முதலிய ஜாதிகளில் ஜனிக்கிருன் என்றும் சாஸ்திரங்கள் முறையிடுவதால் பகவந்நிவேதநம் செய்தே புஜிக்கவேண்டும். மேலும்

अस्नाताशी मलं भुङ्क्ते अजपः पूयशोणितम् ।
अहुताशी कृमिंभुङ्क्ते अदाता विषमश्नुते ॥

காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருந்தவுடன் சரீரசோதனம் செய்துகொண்டோ இல்லாமலோ வாய்நாத்தம் போகிறதற்காக பல்லைமட்டும் துலக்கி ஸந்தியாகாலம் போவதற்கு முன்னதாகவே வெகு அவஸரமாகக் காபிகிளப்புகளுக்குச் செல்லும் நமது பிராமணஸஹோதரர்கள் கீழ்ச்சொன்ன ச்லோகத்தின் அர்த்தத்தை நன்கு உணரவேண்டும்.

गुणा दश स्नानपरस्य साध्यारूपंचतेजश्चबलं च शौचम् ।
आयुष्यमारोग्यमलोलुपत्वं दुस्वप्ननाशश्चधृतिश्च मेधा ॥

என்கிறபடி திருஷ்டத்தில் சரீரஸௌக்கியத்தையும் மூளைக்குத் தெளிவையும் மனதிற்கு ஸந்தோஷத்தையும் தைர்யத்தையும் இன்னும் அனேகவிதமான குணங்களையும் உண்டுபண்ணக் கூடியதாயும் அதிருஷ்டத்தில் ஸகல தேவதைகளையும் ரிஷிகளையும் பிதிருக்களையும் திருப்தி செய்விக்கக்கூடியதென்றும் சாஸ்திரங்களில் கொண்டாடப்பட்ட பிராதஸ்நாநம் செய்யாமல் புஜிக்கிறவன் மலத்தையே புஜிக்கிருனேயல்லது ஆஹாரத்தை புஜிக்கவில்லை. ஏனெனில் இரவில் நாம் தூங்கும்பொழுது

क्षुभ्यन्ति हि सुषुप्तस्य इन्द्रियाणिस्रवन्ति च ।
अङ्गानि समतां यान्ति ह्युत्तमान्यधमैस्सह ॥

अत्यन्तमलिनः कायः नवच्छिद्रसमन्वितः ।
स्रवत्येवादिवारात्रंप्रातस्स्नानं विशोधनम् ॥

நம்முடைய இந்திரியங்களிலிருந்து வெளிப்படும் அசுத்தங்களையும் இந்திரியங்களுக்குஏற்படும் கலக்கங்களையும் உத்தமமான அங்கங்களுக்கும் கீழ்பட்ட அங்கங்களுக்கும் ஏற்படும் சேர்க்கையையும் அவரவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். அதை ஸபையில் விவரிப்பது விரஸம். பகலில் விழித்துக்கொண்டிருக்கும்போதே ஏற்படும் அசுத்திகளுக்குக் குறைவில்லை. ராத்திரியில் உண்டாவதைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ? இந்த அசுத்தியைப் போக்கடித்து ஒருவாறு சுத்திசெய்வதற்காகத்தான் வீட்டில் சாக்கடையை யலம்புவதுபோல் பிராதஸ்நாநம் விதிக்கப்பட்டிருக்கிறது இதைச் செய்யாமல் வயிற்றை நிரப்பிக்கொண்டு கிருதார்த்தர்களாகத் தங்களை நினைத்துக்கொண்டிருக்கும் மனிதர்களின் மனோநிலைமையையும் புத்திபோக்கையும் என்னென்று எடுத்துரைப்பதோ நானறியேன். பிரத்தியக்ஷத்தில்விசேஷமான ஆரோக்கியமுள்ளபிராதஸ்நாநத்தையேவிட்டுப்புஜிப்பவர்களை அப்பிரத்தியக்ஷமான பிரயோஜனத்தையே பிரதானமாய் தரக்கூடியதாயும் திருஷ்டத்திலும் பிரயோஜனமுள்ளதென்று இப்பொழுது பிரபொஸர் ராமமூர்த்திமுதலிய சிலர்கள் அனுபவித்து எடுத்துக்காட்டி பிறகு வெகு சிலர்களால் நமது முன்னோர்களான ரிஷிகளின் அனுஷ்டானங்கள் ஸரிதான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற பிராணாயாமம் ஜபம் முதலியதைச் செய்துவிட்டுப் பிறகுதான் புஜிக்கவேண்டுமென்று ஆஸ்திகர்கள் வற்புறுத்தினால் அது பலிப்பது நிச்சயமில்லை. ஆனால் ஜபம்செய்யாமல் புஜிப்பவன் துர்கந்தமான சீயையும் ரத்தத்தையுமே புஜிக்கிறான் என்று சாஸ்திரங்கள் சொல்லுவதை ஆஸ்திகன் நமது சாஸ்திரங்களின் கருத்தையறியாத பிராமணச்சிறுவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தவேண்டியது அவசியம் என்றே நினைக்கிறேன். மேல்நாட்டு ஐரோப்பியர்களின் பழக்கத்தினால் தொத்துவியாதிபோல் நமது புண்ணியஇந்தியாவில் பரவிய பாழுங் காப்பிக்குடிப் பழக்கத்தின் மஹிமையினாலல்லவா நமது ஸஹோதரர்கள் நமது வர்ணாசிரம தர்மங்களின் கௌரவத்தையும் அனுஷ்டானங்களின் ரஹஸியத்தையும் பிரயோஜனத்தையும் அடியோடு மறந்து தற்காலத்தில் நாம்புகளுக்கும் நாக்குக்கும்

திருப்தியைக்கொடுத்தபோதிலும் நாளடைவில் வீரியத்தையடக்கி தாதுவை ஒடுக்கி ரத்தத்தை நிற்கச்செய்து பலஹீனத்தையும் நீரிழிவு முதலிய ரோகங்களையும் உண்டுபண்ணும் காபி, தேயிலை முதலிய பானங்களில் புத்தியைச்செலுத்தி சரீரத்தைக்கெடுத்துக் கொள்வதுடன் பணத்தையும் சிலவழித்து குடும்பத்தையும் ஏழ்மைத்தனமுள்ளதாகச் செய்துவிடுகிறார்கள். மதவிஷயத்தில் சிரத்தையில்லாவிட்டாலும் தேசாபிமானிகள் என்று மார்தட்டிக் கொண்டு திரியும் நமது ஸஹோதரர்கள் காபி தேயிலை வகையறாக்களின் உற்பத்தியையும் அவைகளுக்கு நாம் கொடுக்கும் பணம் போய்ச்சேருமிடத்தையும் அவை உண்டாகும் தோட்டங்களில் நமது இந்திய ஒப்பந்தக் கூலிகள்படும் கஷ்டங்களையும் அவர்கள் நடத்தப்படும் மாதிரியையும் தெரிந்துகொண்டாவது காபிக்குடியை ஒழிப்பார்களா? காபி குடிப்பவர்கள் இவ்விந்தியாவில் அதிகமாகிவிட்டதாலல்லவா நமது இந்துக்களுக்கு வைதிகலௌகிக கர்மங்களுக்கு அவச்யம் வேண்டியதாகிய நெய் பால் தயிர் விலை ஏறியும் சிலவிடங்களில் எவ்வளவு விலை கொடுத்தபோதிலும் கிடைக்காமலும் கிடைக்குமிடங்களிலும் கலப்படமில்லாத சுத்தமான நெய் முதலியவை அகப்படுவதும் துர்லபமாகிவிட்டது. இதைப்பற்றி அதிகம் சொன்னால் விஸ்தரிக்கும். ஆகையால் பிரகிருதத்தை ஆரம்பிக்கிறேன். ஹோமம் செய்யாமல் சாப்பிடுகிறவன் புழுக்களைப் புஜிக்கிறான். இதின் அபிப்பிராயம் என்னவென்றால் பஞ்சமஹாயக்ஞம் வைச்வதேவம் இவைகளைச் செய்யாமல் சாப்பிட்டால் ஐந்து தோஷங்கள் மனிதர்களுக்கு உண்டாகின்றன. சமையல் செய்யும்போது ஸூக்ஷ்மமான சில பிராணிகள் ஹிம்ஸிக்கப்படுகின்றன. அப்படி ஹிம்ஸிக்கப்பட்ட பிராணிகளுடன்கூடின ஆகாரத்தையே நாம் புஜிப்பதால் புழுக்களை புஜித்ததாக ஏற்படுகிறது. இந்த தோஷம் போகவேண்டியதற்காகவே வைச்வதேவ பஞ்சமஹாயக்ஞங்கள் என்கிற ஹோமம் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது—

पञ्चसूना गृहस्थस्य वर्तन्तेऽहरहस्सदा ।
खण्डनी पेषणी चुल्ली जलकुम्भउपस्करः ॥
एताभिर्वाहयन्विप्रो बद्ध्यते वै मुहुर्मुहुः ।
एतासां पावनार्थाय पञ्च यज्ञाः प्रकल्पिताः ।

சரீரதாரணத்திற்கு வேண்டிய அன்னுதிகளைச் சமைப்பதற்காக நெல் முதலிய தானியங்களை உரலில் போட்டு உலக்கையினுல் குத்தும்போதும், மிளகாய் முதலியவைகளை அம்மியில் வைத்து குழவியால் அறைக்கும்போதும் அடுப்பில் வைத்து அக்னியினுல் பாகம் செய்யும்பொழுதும் ஜலத்தை வைத்து பக்குவம் செய்யும் போதும், முறம் சலடைகளினுல் புடைக்கும்பொழுதும் ஸூக்ஷ்ம மான அனேக ஜீவராசிகளுக்கு ஹிம்ஸையை உண்டுபண்ணியே ஆஹாராதிகள் சமைக்கப்படுகின்றன. இந்த பாபமானது ஒவ்வொரு மனிதனுக்கும் நிர்ப்பந்தமாய் பிரதிதினமும் நேருகிறதாகையால் இதற்குப் பிராயச்சித்தமாக பஞ்சமஹாயக்ஞங்களைச் செய்து அந்த பாபங்களைப் போக்கடித்துத்தான் ஆஹாராதிகளைப் புஜிக்கவேண்டும். தவிரவும் இந்த பஞ்சமஹாயக்ஞங்களைச் செய்யாமல் புஜிப்பவன் திருடனுக்கொப்பானவன் என்றும், பாபத்தை புஜிப்பவன் என்றும் பஞ்சமஹாயக்ஞங்களைச்செய்து அதிலிருந்து மிகுந்த அன்னத்தைப் புஜிப்பவர்கள் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுகிருர்களென்றும் கீதை மூன்ருவது அத்தியாயத்தில் பகவான் உபதேசிக்கிருர். சுருதியும் இவ்வர்த்தத்தை வெளியிடுகிறது. பஞ்சமஹாயக்ஞங்களைச் செய்தபிறகு

भोजयेत् पूर्वमतिथिकुमारव्याधितगर्भिणीसुवासिनीस्थविरान् जघन्यांश्च ॥

நமது கிருஹத்திற்கு வந்த அதிதிகள் என்கிற விருந்தாளிகளையும் குழந்தைகளையும் வியாதியால் பசி தாங்கமுடியாதவர்களையும் கர்ப்பிணிகளையும், தங்கை தமக்கை முதலியவர்களையும், வயோதிகர்களையும், வேலைக்காரர்களையும் முன்னுடி சாப்பிடும்படி ஏற்பாடு செய்து பிறகு வீட்டுக்கு எஜமானன் புஜிக்கவேண்டும். ஒருவருக்கும் கொடுக்காமல் தான்மட்டும் புஜித்தால் அந்த ஆஹாரம் சரீரத்திற்கு விஷமாகப்பரிணமிக்கும் என்பதைத்தான் अदाताविषमश्नुते என்கிற நாலாவது பாதத்தினுல் வெளிப்படுத்தினுர்கள். கீழ் நிருபித்தபிரகாரம் ஸ்நாநம், ஸந்தியாவந்தனம், தேவபூஜை, வைச்வதேவம், பஞ்சமஹாயக்ஞம் இவைகளைச் செய்வதற்குமுன்னும் பகவானுக்கு நிவேதனம் செய்யாததையும் புஜிக்கவே கூடாதென்பதுதான் சாஸ்திரங்களின் பூர்ணமான ஸம்மதம். பிறகு புஜிக்கவேண்டிய பிரகாரமாவது—

उपलिप्ते शुचौ देशे पादौ प्रक्षाल्य वै करौ ।
आचम्यार्द्राननोऽक्रोधः पञ्चार्द्रो भोजनं चरेत् ॥
चतुरश्रं त्रिकोणं च वर्तुलं चार्धचन्द्रकम् ।
कर्तव्यमानुपूर्व्येण ब्राह्मणादिषु मण्डलम् ॥

கைகால்களை அலம்பிக்கொண்டு ஆசமனம் செய்து ஜலத்தினால் நனைக்கப்பட்ட முகத்துடன் சுத்தமான இடத்தில் பிராமணர் முதலியவர்களுக்கு முறையே சதுரம், முக்கோணம், சக்கிராகாரம், பாதிசந்திரன்போன்ற ஆகாரம் என்று விதித்தபிரகாரம் பசுவின் சாணம் கலந்த ஜலத்தினால் மண்டலம் செய்து அதில் போஜனபாத்திரத்தை வைத்துப் புஜிக்கவேண்டும். போஜன பாத்திரத்தை

अमत्रं वाथ कांस्यं वा राजतं वा हिरण्मयम् ।
तानि पात्राणि सर्वेषां यथाविभवमाचरेत् ॥
पलाद्विंशतिकादर्वागत ऊर्ध्वं यथेच्छया ।

வெண்கலத்திலாவது வெள்ளி தங்கம் இவைகளிலாவது இருபது பலம் நிறைக்குக் குறையாமல் அவரவர்கள் தம் சக்திக்குத் தக்கபடிசெய்து உபயோகித்துக்கொள்ளலாம். பாத்திரத்தில் வைத்துப் புஜிக்கும் பழக்கத்தை வைத்துக்கொள்வதில் அநேகவித அஸௌகரியங்கள் நேரிடுமாகையாலும் சிஷ்டர்களான பெரியோர்கள் புஜிப்பதற்கு பாத்திரங்களை உபயோகிக்கிறதில்லையாகையாலும் சாஸ்திரங்களில் பாத்திரங்களைவிட

पनसाम्रनारिकेलकदली बिल्वपत्रके ।
वह्निकांचिपत्रे च चान्द्रायणफलं लभेत् ॥

பலா, மா, தென்னை, வாழை முதலிய இலைகளில் உண்பதால் சாந்திராயணவிருதபலத்தை அடைகிறான் என்று விதியிருப்பதாலும் கீழ்ச்சொன்ன இலைவகைகளுக்களில் ஏதேனும் கிடைத்ததை உபயோகிப்பதே நலம். போஜனம் செய்ய உட்காருகையில்

आयुष्यं प्राङ्मुखो भुङ्क्ते यशस्यं दक्षिणामुखः ।
श्रियं प्रत्यङ्मुखो भुङ्क्ते ऋतं भुङ्क्ते उदङ्मुखः ॥

கிழக்கு முகமாய் புஜித்தால் ஆயுள் விருத்தியாகும், மேற்குமுகமானால் ஐச்வரியம் விருத்தியாகும். தெற்குமுகமாய் புஜித்தால் நல்ல கீர்த்தியுண்டாகும், வடக்கு முகமாய் புஜிப்பவனுக்கு ஸத்

யம் அவருமலிருக்கும் என்றும் ஒவ்வொரு திக்குக்கும் சிலபலன் சொல்லப்பட்டிருந்தபோதிலும் प्राङ्मुखोऽन्नानि भुञ्जीत என்று ஆபஸ்தம்பருடைய சாஸனமிருப்பதனுல் கிழக்கு முகமாய் போஜனம் செய்வது நித்தியம் என்றும் மற்றதிக்குகள் காம்ய விஷயம் என்றும் சாஸ்திரங்களின் வியவஸ்தை.

विशुद्धवदनः प्रीतो भुञ्जीत न विदिङ्मुखः ।

சுத்தமான முகத்துடனும் ஸந்தோஷத்துடனும் கூடியவனுக ஸாப்பிடவேண்டுமென்றும் நான்கு திக்குக்களைத்தவிர விதிக்குகள் முகமாய் போஜனம் செய்யக்கூடாதென்றும் சாஸ்திரம் தடுக்கிறது. இனி போஜனம்செய்யும்போது ஆஸனத்திலமர்ந்து புஜிக்க வேண்டும்

आर्द्रपादस्तु भुञ्जीत प्राङ्मुखस्त्वासने स्थितः ।
पादाभ्यां धरणिं स्पृष्ट्वा पादेनैकेन वा पुनः ॥

ஆஸனத்திலுட்கார்ந்துகொண்டு ஒருகாலினுலாவது இரண்டு கால்களினுலுமாவதுபூமியைத்தொட்டுக்கொண்டுபுஜிக்கவேணும்.

आसनारूढपादस्तु ब्राह्मणो यस्तु भुञ्जते ।
मुखेन धमते चान्नं तुल्यं गोमांसभक्षणे ॥

கால் பூமியில் படாமல் ஆஸனத்திலேயே காலைவைத்துக்கொண்டு புஜிப்பதையும் அன்னத்தை முகத்தினுல்ஊதுவதையும் கோமாம்ஸ பக்ஷணத்திற்கு ஸமமாய் சொல்லியிருப்பதால் கால் மட்டும் பூமியில் படவேண்டும். இனி பசிநிவர்த்திக்காக ஆஹாரத்தை புஜிப்பதற்குமுன் ஹிருதயத்தில் வஸிக்கும் வைச்வாநரரூபியான ஸர்வேச்வரனை பிராணுஹுதியென்னும் அக்னி ஹோத்திரத்தினுல் ஆராதிக்கவேண்டும்.

आपोशनं परीधानं पूर्वमाच्छादनं परम् ।
भवत्यन्नमनग्नं हि सोत्तरीयं तथाऽमृतम् ॥

என்கிற வசனத்தின்படி ப்ராணுஹுதி செய்து பிறகு ஸாப்பிடுகிற அன்னத்திற்கு கீழ்மூடிபோன்ற பூர்வாபோஜனத்தை பிராணுஹுதிக்கு முன்னுடியும் மேல்மூடிபோன்ற உத்தராபோஜனத்தை புஜித்தபிறகும்

भोजनाद्यन्तयोर्देवपादाब्वेकं समन्त्रकम् ।
पिबेदवश्यं सद्भक्तः मिश्रितं वार्हणादिभिः ॥

என்கிறபடி பகவத்பாதோதகத்தினுல் புனிதப்படுத்தி விதிப்படி செய்யவேணும்.

धारयन् सव्यहस्तेन पात्रं तद्वाग्यतो द्विजः ।
अङ्गुष्ठतर्जनीश्चैव मध्यमा च तृतीयका ।
तिस्रो द्वेऽङ्गुली चैका प्रशस्ताः पात्रधारणे ।

போஜன பாத்திரத்தை இடதுகையின் கட்டைவிரல் ஆள் காட்டிவிரல் நடுவிரல் இவைகளில் ஏதேனும் ஒன்ருவது இரண்டு அல்லது மூன்று விரல்களினுலுமாவது பிடித்துக்கொண்டு பூர்வா போசன ஜலத்தை சப்தமில்லாமல் ஸாப்பிடவேண்டும்

शब्देनापोशनं पीत्वा शब्देन दधिपायसे ।
शब्देनापः पयस्तक्रं सुरापानसमं स्मृतम् ॥

சப்தத்துடன் ஆபோசன ஜலத்தையும் தயிர்பால் முதலியதிரவவஸ் துக்களையும் பானம் செய்வதை ஸுராபான ஸமமாகச் சொல்லி யிருப்பதால் சப்தத்துடன் உறிஞ்சாமல் ஆபோசனம் செய்ய வேண்டும். ஆபோசனம் செய்வதற்குமுன் இலையில் இருக்கும் அன்னத்தை உஷ்ணம் ஆறுவதற்காக அலர்த்துவதும் பிசைவதும்கூடாது. அப்படிச் செய்தால் அந்த அன்னம் மாம்ஸத்திற்கு ஸமமாகவும் சாப்பிடத்தகாததாயும் ஆய்விடுகிறது. ஸாப்பிட்டால் சாந்திராயணம் என்னும் விருதத்தைச்செய்து அதினு லுண்டான பாபத்தைப் போக்கடித்துக்கொள்ளவேண்டும் என்பதைப்பின்வரும்

आपोशनमकृत्वा तु यद्यन्नं विस्तृतं भवेत् ।
तदन्नं मांसतुल्यं स्यात् भुक्त्वा चान्द्रायणं चरेत् ॥

என்கிற ஸ்மிருதி வசனத்தினுல் அறியவும். இடது கையினுல் பிடித்துக்கொண்ட போஜன பாத்திரத்தை பிராணுஹுதி செய்து முடியுமளவும் விடக்கூடாது. பிறகு விட்டுவிடலாம்.

आस्ये चान्नस्य निक्षेपो मन्त्रैः प्राणादिपञ्चकैः ।
तदेव भोजनं ज्ञेयं तत्रैव नियमःस्मृतः ।
प्राणाहुतिषु सर्वासु हुतास्वेव त्यजेद्गृही ॥
पात्रस्य धारणं मौनं तात्रत्सिद्धिर्भवेद्द्विजः ।
अन्नस्य वा निषेधार्थमुपदंशस्य वा पुनः ॥
धर्मार्थं विसृजेद्वाचं नासद्वाचमुदाहरेत् ।
नावश्यं भोजने मौनं कुटुम्बाश्रमवासिनाम् ॥

वाचोपचारः कर्तव्यो भुञ्जतां सहभोजने ।
प्राणाग्निहोत्रादन्यत्र नासौ मौनं समाचरेत् ॥
यदि भुञ्जीत तुष्णीं तु सर्वत्रैव हि भोजने ।
सपापो भ्रातरं हन्ति सन्ततिं चाचिराच्छ्रियम् ॥

போஜனகாலத்தில் பாத்திரத்தை இடது கையினால் தரிக்கவேண்டியது மௌனமாயிருக்கவேண்டியதுமுதலிய நியமங்களெல்லாம் மந்திரத்தினால் பிராணாஹுதி செய்யும்வரைக்குந்தான், பிறகு வேண்டியதில்லை, ஏனெனில் அவ்வளவுடன் சாஸ்திரீயமான போஜனம் ஸித்தித்துவிடுகிறது. பிறகு பசி தீருவதற்காக உண்கிறோம். அப்பொழுது மௌனத்தை அங்கீகரித்தால் அபேக்ஷையிருக்கும் அன்னம், சாகம் இவைகளைக் கேட்கவும் அபேக்ஷையில்லாததை நிஷேதிக்கவும் முடியாமல்போய்விடும். ஜாடையினால் விருப்பமுள்ளதை கிரஹித்தும் விருப்பமில்லாதவற்றை தடுத்தும் விடலாமேயெனில்

मौनव्रतं महाकष्टं हुङ्कारेणापि नश्यति ।

மௌனவிருதமானது ஹுங்காரம்செய்தாலும் கெட்டுவிடுமாகையினால் மௌனவிருதம் வைத்துக்கொண்டும் பிரயோஜனமேற்படாது. மேலும் குடும்பியான கிருஹஸ்தன் அதிதி பந்துமித்திரர்களுடன் புஜிக்கையில் அவர்களுக்கு வேண்டியதைப் பரிமாறும்படி வாயினால் உபசாரவார்த்தைகள் சொல்லி வேண்டியதைப் பரிமாறும்படி செய்து புஜிப்பிக்கவேண்டியதால் அதற்கும் விரோதிக்கும். ஆகையினால் கிருஹஸ்தன் பிராணாக்னிஹோத்ரத்திற்குப் பிறகு மௌனவிருதம் வைத்துக்கொள்ளக்கூடாதென்றும் போஜனம் முடியும்வரையில் மௌனவிருதத்தை வைத்துக்கொண்டால் அவன் பாபியாகிறான். அவனுடைய பிராதாவுக்கும வம்சத்திற்கும் ஸம்பத்துக்களுக்கும் நாசமுண்டாகிவிடும் என்றும் சாஸ்திரம் நிந்தித்திருக்கிறது. பிராணாஹுதி என்னும் பிராணாக்னிஹோத்திரத்தைக்குறித்துசாந்தோக்யஉபநிஷத் 5வதுப்ரபாடகம் 19வது கண்டம்முதல் 23-வது கண்டம்வறைக்குமுள்ள உபநிஷத் வாக்கியங்களால் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கும் பிரகாரத்தையும் அதின் தத்வத்தையும் அறியாமல் எவனொருவன் பிராணாக்னிஹோத்திரத்தைச் செய்கிறானோ அவன் அக்கினியில் ஜ்வலிக்கும் தணலை அப்புறப்படுத்தி சாம்பலில் ஆஹுதிசெய்தவனாகிறான். அதனால் பிராணாக்கினிஹோத்திரமென்ற பிராணாஹுதி செய்தே புஜிக்கவேண்டும்.

(தொடரும்)

—— வே. ஸ்ரீநிவாஸதாதாசாரியார்.

# வைதிகவிநோத சம்பாஷணை.

காவேரீ தீரத்தில் திலகம்போல் விளங்கும் ஸ்ரீமத் பஞ்சநத க்ஷேத்திரத்தில் புனிதமான புஷ்பமண்டபத்தில் ஒருநாள் விடியற் காலம் ஜப்யேசன் ரங்காராஜன், ஆனந்தராயன் என்ற மூன்று வித்தியார்த்திகள் சேர்ந்தார்கள். காலக்கிரியைமுடித்துக்கொண்டு அவர்கள் பரஸ்பரம் நல்வரவுகூறி, குசலப்பிரச்னம் செய்து "வேடிக்கையாய் வாக்கியார்த்தம் சொல்லுவோமே" என்று சுத்தமான ஓர் அங்கணத்தில் உட்கார்ந்தார்கள். இருவர்களைநோக்கி

ஜப்யேசன்:- தங்களைப்பார்த்தால் பண்டிதர்களென்று எனக்குத் தோன்றுகின்றது. எந்த சாஸ்திரத்தில் தங்களுக்குப் பாண்டித்தியம்? ஆகார (உருவ)த்தாலேயே தங்கள் மதமின்னதென்றும்தெரிந்துவிட்டது. ஸாமான்ய சாஸ்திரந்தவிர மதக்கிரந்தங்களிலும் பரிசயமுண்டோ? தக்கதோர் பண்டிதரிடம் பாடம் கேட்டு மதாஹஸ்யத்தைத்தெரிந்து கொண்டிருக்கிறீர்களோ? இவ்வித நற்சினேகிதர்களை, உதயத்திற்றுனே கூட்டிவைத்ததற்காக தேவதேவனது திருவருளைத் தியானித்துத் துதிக்கின்றேன்.

இருவர்களும்:— தாங்கள் வஸிக்குமிடம் யாது? தங்கள் திருநாமம் எவ்வளவு அக்ஷரங்கள் அமைந்துள்ளது? தங்கள் மதம் எது? என்றார்கள்.

ஜப்:— அறிஞர்காள்! யான் இங்கேயுள்ளவன். என்னை எனது சுற்றத்தார் 'ஜப்யேசன்' என்று வழங்குவார்கள். எனது மதமும் இங்குள்ளோர் மதமுமொன்றே. அதையே அத்வைதம் என்பார்கள். அதுபெயர் மாத்திரமில்லை. ஆனால் இணையில்லாத மதமாதலால் பொருளும் பொருந்தியதென்பார்கள்.

ரங்காராஜன்:— ஆனந்தராயசர்மாவைநோக்கி இரஹஸ்யமாக ஓமித்ரா! இதுயான் கேட்காதது. அத்வைதமென்றோர் மதமுண்டா? இச்சொல்லுக்குப் பொருளென்ன? இதற்கறிகுறியாது? இதற்குப்ரமாணம்யாது? மித்திரா! நீவிர் அறிவீரா?

ஆனந்தராயசர்மா:— மித்திரா! அடிமுதல் முடிவரை முற்றிலும் பிரமாணங்களுடன் அறிந்திலேன். ஆயினும் ஒருசமயம் எமது ஆசிரியர் படிப்பிக்கும் காலத்தில் சங்காசாரியார் கண்டமதம்

அத்வைதம்என்றும், அது சிறிதுகாலம் நமதுதேசத்தில் வழங்கியது என்றும், அதைக்கண்டிக்கவே ஸ்ரீமத்ராமானுஜ மூர்த்திகளும் எமது பரமாசாரியாளான ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த முனிராஜனும் அவதரித்தனராம். மாயாவிகளென்று நீர் கேட்டதில்லையா? அவர்கள் தானிவர்கள்.

ரங்:— (இரஹஸ்யமாய்) பெரியோர் அனேகர் வழங்கக்கேட்டதுண்டு.

ஜப்:—ஐயங்மீர்—தாமிருவரும் காதுடன் முகம்சேர்த்து என்ன பேசுகிறீர்கள்? உமது ஆனந்தராய சர்மாவின் அடியுதடு அசைந்தவழிநோக்கி 'இவர் மாயாவிபதத்தையுபயோகித்தார்' என ஊஹிக்கிறேன்.

ரங்:—ஓ! ஐய !! நியாயநூற் பயிற்சி மிகுந்தவர் நீர். ஆதலாற்றான் உண்மைகண்டு அனுமானித்தீர். ஐய! அச்சொல்லால் உம் மதத்தவரை வழங்குவதுண்டோ?

ஜப்.— இல்லை! இல்லை!! துவேஷ மிகுதியால் விமதஸ்தர் உபயோகிக்கும் சொல்லது.

ரங்.—ஐய! ஏது மறைக்கின்றீர். உமது மதஸித்தாந்தநூல்களில் இவ்வுலகம் மாயாமயம் என்று சொல்லப்பட்டுள்ளதாக பல மதாசாரியர்கள் எடுத்து அவரவரியற்றியநூல்களில் வழங்கியிருக்கிறார்களே! அதுபொய்யா?

ஜப்.— ( ஹீ! ஹீ!! என்று நகைத்து ) விபரீத உணர்ச்சியின் வைபவமிது. எம்மினத்தார் ப்ரம்மவாதிகளேயன்றி மாயாவாதிகளல்ல. உலகமே ப்ரம்மமயம் என்று வாதிக்கின்றவர். உலகத்திற்கு மாயையே முதற்காரணமென்று வாதிப்பவரே மாயாவிபத மகுடவல்லபர்கள், யாம் அவ்வினத்தவரல்ல.

ரங்;— ஐய! ஏது ஆச்சரியமான அபூர்வசித்தாந்தம்காட்டுகின்றீர்? மேற்பட்டதும் கீழ்ப்பட்டதுமாகப் பலவிதப்பட்டுக்காணப்படும் இவ்வுலகம் ப்ரம்மமயமா? இது யுக்திக்கொத்ததோ! ஒவ்வாததோ! பிறகு விசாரிப்பாம். இம்மதத்தில் வேதமாதாவும் தமது கடாக்ஷத்தைச் சிறிதேனும் கொடுக்கின்றனளா?

ஜப்:— கடாக்ஷம் மட்டிலல்ல, ஸர்வ உயிர்நிலையும் வேதமாதாவுக்கு இங்கேயுள்ளது.

ரங்:— ஐய! இப்படிச் சொல்லுவதால்மாத்திரம் பிரமாணவசனத்தைக் கேட்காமல் ஸ்பஷ்டமாயறியமுடியாது. வேதங்களில் இவ்வுலகம் பரமான்மாவிடம் தோன்றி- இருந்து- ஒடுங்கும் என்று உலககாரண வஸ்துவாகப் பரமனைக் குறித்ததுண்டு. அங்ஙனமே வேதாந்தஸூத்திரம் வகுத்தருளிய ஆசிரியர் பாதராயணமுனிவரும் "எதனிடம் உலகத்தோற்றமாதியோ (அது ப்ரம்மம்) என்று பரப்ரம்மவிலக்கணத்தைச் சூத்திரத்தால் கூறியுள்ளார். இவ்விஷயத்தில் பிராசீனர்களின் யுக்திகளும் வெகுவாய்க் கிடக்கின்றன. நீவிர் கூறியது ஸப்பிரமாணமானால் ஒரு பிரமாணவசனத்தையாவது எடுத்துக்காட்டியருள.

ஐப்:— ஒன்றென்பானேன், அனேக நூறுவசனங்களைக் காட்டுவோம். பாருங்கள்! "ஆன்மா ஒன்றே ஆதியிலுளது, ஹே ஸௌம்ய! இதெல்லாமாதியிற் சத்தாகவே இருந்தது, இஃது ப்ரம்மமாகவே ஆதியிலிருந்தது, இவையெல்லாம் ப்ரம்மமேயன்றோ?" ப்ரம்மமொன்றே. அது ஸஜாதீயவிஜாதீயஸ்வகதபேதமற்றது. "இவையெல்லாம் ஆன்மமாத்திரமே, இதெல்லாம் ப்ரம்மமே, ஈசனால் இவையெல்லாம் மறைபடவேண்டும்' யானே முதலில் உள்ளவன் இருக்கின்றேன் இருப்பேன் என்னிலும் வேறாக ஏதுமிலே, இதெல்லாம் அவ்வான்மமயம், எந்தவிடமவனுக்குச் சர்வமும் ஆன்மமயமாயிற்றோ அப்பொருள் ஒன்றேஎனக்கண்டவர்க்கு மோஹமேது? சோகமேது? மெய்ப்பொருளொன்றே பொய்யும் மெய்யுமாயிற்று" என்பதாதி கருத்தை போதிக்கும் சுருதிவசனங்கள் ஆயிரக்கணக்காயிருக்கின்றபடியால் அவ்வளவையும் எடுத்துரைத்துவிடுவது அஸாத்தியமானதால் இம்மட்டில் விட்டோம். இது மட்டோ? அகில ஜகதாசார்யனுன ஸ்ரீவேதவியாஸமகாமுனிவரும் இதேகருத்தைக் கொண்டு ப்ரம்மஸூத்திரம் முதலத்தியாய முடிவில் "பிரகிருதியும் (உபாதானகாரணமும்) அதுவே. பிரதிக்ஞை, திருஷ்டாந்தங்கள் ஒவ்வுமாறு" என்ற ஸூத்திரத்தையருளினர். இவ்விஷயத்தில் ஸ்மிருதிவசனங்களும் புராணவசனங்களும் இதிஹாஸவசனங்களும் அபியுக்தர்கள் வசனங்களும்அளவைக்கடந்தன. இனியும் வேண்டுமானால் பகவற்கீதையைப் பலவழியும் ஆராய்ந்துபாரும். அதில் ஸ்ரீகண்ணபிரான் யாது உபதேசித்தார்? **सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः** எல்லாவற்றையும் நீ அடைவாய்,

அதனால் நீ எல்லாமுமாவாய் என்றல்லவோ முடிந்ததை முடித்தோதினர். எல்லோரும் படிக்கும் மந்திரங்களையாவது நீங்கள் கேட்டதில்லையா? உலகெலாம் நாராயணன் உலகம் உண்டானதூஉம் உண்டாவதூஉம் விசித்திரமாயுள்ளதூஉம் பலவகைப் பட்டதூஉம் உண்டாகப்போவதூஉம் எல்லாம் உருத்திரனே. இக்கருத்தை வெளியிடும் மந்திரங்களை யாவரும் அறிவாரே, படிப்பாரே.

ரங்:— ஐய! இவைகளிருக்கட்டும், இவைகட்குச் சமமும் மேலுமான அனேக வசனங்கள் கடவுளை உலகக் காரணப்பொருளாகவே கூறுகின்றன. ஆகவே உலகத்தைவிட கடவுள் வேறாயவனே என்றல்லவா சித்திக்கின்றது. அவற்றிற்கும் தாங்களுதாஹரித்த வசனங்கட்கும் சிறிதும் விரோதமின்றி பொருட்படுத்தும் பொறுப்பு உம்முடையதே. ஐய! அவைகளைக் கேளும். “எதனிடம் இப்பூதங்கள் பிறக்குமோ, எதனால் பிறந்தவை உயிர்க்குமோ, எதனிடமொடுங்கி மறையுமோ, அது ப்ரம்மம் பூமி அந்தரிக்ஷங்களைப் படைத்த தேவன் ஒருவன். இவனிடமிருந்தே பிராணன் மனம் இந்திரியங்கள் ஆகாயம் வாயு தேயு நீர் நிகிலத்தையும் தரிக்கும் தரணி இவை பிறந்தன, ‘தபஸால் ப்ரம்மம் விருத்திக்கும், அதனிடம் அன்னம் பிறக்கும், அநேக பதிகளைத்தான் சிருஷ்டித்து ஸர்வாதிபதியாய் அம்மஹாத்மா இருக்கிறார்’ ஒருவனே ஸர்வ உலகங்களையும் நடத்துகிறான், “மாயையைப் பிரகிருதியென்றும், மாயாவியை மஹேசுவரன் என்றும் அறிந்திடு, அவனது அவயவங்களாகியவர்களால் இவ்வுலகமெல்லாம் வியாபிக்கப்பட்டது, சிலந்தி சிருஷ்டித்துக்கிரஹிப்பதுபோலும் பூமியிற் பூண்டுகள் முளைப்பதுபோலும் மனிதனிடம் கேசங்களுண்டாவதுபோலும் அக்ஷரனென்னும் பரவஸ்துவினிடம் உலகமுண்டாகின்றது, இவர் மஹான் பிரபு, புருஷன், ஸத்துவத்தை நடத்துபவன், அவனிடம் மாயையால் அன்னியர் கட்டுண்டார், புருஷனெனப் பிரஸித்தனான நாராயணன் பிரஜைகளைப் படைத்திடுவாமென விரும்பினன், எல்லாப் புவனங்களுக்கும் நாயகனும் எல்லோரும் போற்றப்பெற்றவனுமான தேவனையறிவோம், இந்த ப்ரம்மசக்கிரம் சுழல்வது தேவனது மஹிமையே, க்ஷரம் பிரதானம், ஜீவன் அக்ஷரம் இவ்விரண்டையும் நடத்தும் தேவன் ஏகன், வித்தையையும்

அவித்தையையும் நடத்துபவன் வேறு, உள்ளும்புறமும் அதை வியாபித்து நின்றவன் நாராயணன், எள்ளுக்குள் எண்ணெய் போலும், தயிரில் நெய்போலும் இப்பிரபஞ்சத்துள் அவன் நின்றான், எதனிடமிருந்து சமஸ்தஉலகக்காரணப்பொருள்கள் உண்டாயினவோ அதற்குச்சமனும் அதிகனுமெவனுமில்லை, க்ஷரம் பிரதானமாம், புருஷன் அக்ஷரனும், இவ்விருவரையும் பிரேரிப்பவனான பரமேசுவரன் வேறு என்பதாதிகருத்தைவிளக்கும் சுருதிவசனங்களும்——

यस्मात्क्षरमतीतोऽह मक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ॥

"யான் க்ஷரத்திலும் அக்ஷரத்திலும் வேறாயுள்ளவன், ஆதலால் புருஷோத்தமன் எனப்படுவேன்" என்பதாதி பற்பல ஸ்மிருதி புராணாதிவசனங்களும்ஆப்தவாக்கியங்களும் மற்றுமனேகதந்திரக்கிரந்தங்களும் காணப்படுகின்றன. இவைகளைச்சிறிதுமாராயாது இவ்விதவசனங்களிருப்பதாகவும் நினையாதுஸர்வவேதாந்தங்களும் ஸ்வபக்ஷமாகவேயிருப்பதாகத் தாங்கள் நினைத்தது எதுபற்றி? ஆயினும் தாங்கள் அறிவிற்சிறந்தவராகவே இவற்றிற்கு ஒன்றுக்கொன்று விரோதமின்றிச் சமாதானம் அளிப்பீர்களென நம்புகிறேன்.

ஆந:-(ரங்கராஜனைநோக்கி)மித்திர! நன்குபன்யஸித்தீர் ஆனால்நீவிர் எடுத்துக்காட்டிவந்தபிரமாணமுறைப்படிஉமதுஸித்தாந்தத்தில் "உலகத்தில் ஈசன் உட்புகுந்தான்எனவும் அவனவயவங்கள் எனவும் உள்ளும் வெளியுமவனே" என்பதாதி கருத்துடைய வசனத்தையுதாகரித்தமையால் மித்திரன் கொள்வது உலகம் ஈசுவரனது சரீரமென்று தோன்றுகிறது. அவ்விஷயத்தை எம்மனோர் ஒப்பினரில்லை. அவர்கள் சொல்லும் விஷயத்திற்குப்பிரமாணமாக பிரத்தியக்ஷாதிப் பிரமாணவிரோதமின்றி அவைகளை அனுஸரித்துப் பல வசனங்களையும் அனுகூலதர்க்கங்களையும் உதாஹரித்துவருகின்றார்கள். சிறிது கேட்கப்பிரியமிருப்பின் யான் சொல்லுவதற்கு இடம் தரவேண்டும். ஐய! உலகத்தில் பண்டிதனாயினும் பாமரனாயினும் மழலையாயினும்கிழவனாயினும் இவ்வுலகம் கடவுளல்ல, யாமும் கடவுளல்ல, கடவுளைக் காண்பதரிது என்று தெரிந்துகொண்டிருக்கின்றார்கள். அன்றியும்

ஆரண்யகமுடிவுகளும் அவ்வழியே நின்றுபதேசிக்கின்றன. பாருங்கள். "இரண்டு ஸுபர்ணர்கள் (பக்ஷிகள்) அவர்கள் என்றும் சேர்ந்தவர்கள், ஒருதன்மைப்பெற்றவர்கள், ஒரே விருக்ஷத்திலிருப்பவர்கள் இருவருளொருவர் பிப்பலத்தை (கனி போன்ற கர்மப்பயனை) உட்கொள்ளுவர். மற்றவர் எதையும் புசியாது பிரகாசிப்பார்" என்றும் ஒரே விருக்ஷத்தில் புருஷன் குடிகொண்டான், தனது அஸ்வதந்திரத்தினால் வருந்துகின்றான் என்று தன்னுடன் நிகழும் பானைப்பார்ப்பானே, அன்று அவன் பெருமையைப் பெறுவான் என்றும், அவன் ஈசுவரர்களுக்குப் பரமமஹேசுவரன், அவன் தேவதைகளுக்குப் பரமதேவதை, அவன் காரணமூர்த்திகளுக்குமதிபன், அவனிடத்து மாயையால் மற்றவர் கட்டுண்டார், அவன் எல்லாவுலகங்கட்குமீசன், அவன் உலகத்தைப் புஜிப்பவன், பின்னன் அசிந்தியன் பரமன் ஜீவசங்கத்ததிபன் என்பதாகி பொருளை விளக்கும் வாக்கியங்கள் பலவுள. அதிகம் சொல்லுவதிற்றன் பயனென்ன? பலப் பிரமாணவசனங்களைத் தேடுவதாற்றன் பயனென்ன? சுருதி நிற்க, ஸ்மிருதிகடக்கப், புராணமிருக்க, இதிஹாஸமொழிக, ஆப்தோக்திகளையும் விடுக, ஆசார்யன்தான் ஆணையிடட்டும். உலகத்தில் எவன்தான் வெளிப்பொருள்களைப் புலன்வழியில்லாது தனிமனதாலறிவான். இஃதித்தன்மைத்து எனத்துணியப் புலனுதவி வேண்டவே வேண்டும். (தொடரும்) பத்திராதிபர்.

## பொன்மலை
# ராதாகல்யாண மஹோத்ஸவம்.

சென்ற தைமீ 4வ பொன்மலை பழய ஸி டைப் 4-ம்பிளாக்கில் இருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ கிருத்திவாஸய்யர், சிவராமய்யர் முதலிய ஆஸ்திகமஹாஜனங்கள் ஸ்ரீராதாகல்யான மஹோத்ஸவத்தை உபக்கிரமித்து மிகவும் விமர்சையாய் நடத்தினார்கள். பாகவதர்களும் மிகுந்த பக்தி சிரத்தையுடன் சம்பிரதாயானுசாரமாய் பகவதாராதனங்களைச்செய்து தர்சிக்கவந்த பக்த ஜனங்களின் மனதை பகவச்சரணங்களில் ஈடுபடும்படி செய்தார்கள். மற்றும்சில சங்கீதக்கச்சேரிகளும், பகவத்கதாகாலக்ஷேபமும் பிராம்மண ஸந்தர்ப்பணங்களும் சிறப்பாய் நடைபெற்றன. இந்த உத்ஸவத்தின் இரண்டாவதுதினம் ஷெ ஸபையோர்களின் வேண்டுகோளுக்கிணங்கி திருவானைக்காவல் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகளவர்கள் வித்தியாஸ்தானம் வியாகரணஸாஹித்யோபாத்தியாயரும் மஹோபதேசக கவிரத்தின பிருதாங்கிதருமான பிரும்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள் வர்ணாச்ரம தர்மம்

என்கிற விஷயத்தை மாலை 7-மணிமுதல் 9-மணிவரையில் எளிய தமிழ்நடையில் சிறந்த மேற்கோளுடன் நன்கு உபந்யாசித்தார்கள். அச்சமயத்தில் தர்மஸ்தாபனார்த்தமாய் அவதரித்த ஸ்ரீ பகவான் ராதாகல்யாணமென்கிற இந்தக்கர்மாவை அனுஷ்டித்து இதனால், எந்த தர்மத்தைபோதிக்கிறார்கள் என்பதையும் ஸகல ஜனங்களும் வித்தியாஸமன்றி அனுஷ்டிக்கக்கூடிய சாமான்ய தர்மங்களின் ஸ்வரூபங்களையும் அவைகளை அனுஷ்டிக்கவேண்டிய முறைகளையும் நன்றாய் அறிவித்து ஸத்தியத்தின் ஸ்வரூபத்தையும் அதை எங்ஙனம் அனுஷ்டிப்பது என்பதையும் அதனால் எற்படும் பயனையும் அப்பயனைப்பெற்ற மஹான்களையும் வெகு தெளிவாய் நிரூபணம்செய்து ஸகலஜனங்களுக்கும் அதிகமான ஆனந்தத்தையுமுண்டுபண்ணினார்கள். பிறகு உத்ஸவத்தின் 5-வது தினம் ஷை ஸபையோர்களின் பிரார்த்தனானுசாரமாக ஸ்ரீ ஜகத்குரு ஷை வித்தியாஸ்தானம் வேதாந்த உபாத்தியாயர் சாஸ்திரதிலகம் போலகம் பிரும்மஸ்ரீ சு. ஸ்ரீராமசாஸ்திரிகள் அவர்கள் மாலை 7-மணிமுதல் 9-மணிவரையில் பக்தியோகத்தைப் பற்றிப் பிரசங்கித்தார்கள். துவக்கத்தில் பக்தியின் பரமபலமான மோக்ஷஸ்வரூபத்தையும் அதற்கு முக்கிய சாதனங்களாய் மறைகளில் கூறப்பட்ட 4-புருஷார்த்தங்களையும் அவைகளுடைய உண்மையான பொருளையும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற இவைகளின் கிரமத்திற்கு எற்பட்டுள்ள பிரயோஜனத்தையும் முறையே விஸ்தாரமாய் போதித்துப்பிறகு பக்தியின் ஸ்வரூபம் அதையனுஷ்டிக்கவேண்டிய மார்க்கம் இந்த பக்தியை தேசம் காலம் அதிகாரி என்கிற நியமமன்றி எத்தேசத்திலும் எக்காலத்திலும் எந்த அதிகாரியும் செய்யலாமென்று அறிவித்துச் சபையோர்களின் உள்ளத்தை ஆனந்தவெள்ளத்தில் அமிழ்த்தினார்கள்.

பிறகு ஷை ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள் பக்தியின் இலக்கணத்தை வெளியிடும்சிவானந்தலஹரி என்கிற நூலிலுள்ள 'அங்கோலம்' என்கிற சுலோகத்தின் கருத்தை நன்கு விளக்கிக் காட்டி இதனால் பக்திசெய்யும் அதிகாரிகளை ஐந்து விதமாக நம்முடைய பரமாசார்யாள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அந்தந்த அதிகாரிகளின் அனுபவத்தை ஒவ்வொரு திருஷ்டாந்தத்தின் வாயிலாகக் கூறியிருக்கிறார்கள் என்றும் நிரூபித்து

தேவதாநிந்தை செய்யக்கூடாதென்று சிறந்த பிரமாணங்களால் எடுத்துக்காட்டி 10-மணியுடன் உபந்யாஸத்தைப்பூர்த்தி செய்து ஸபையிலுள்ளோர்களுக்கு விசேஷதிருப்தியை உண்டுபண்ணினார்கள். அப்பால் பகவானுக்கு அர்ச்சனம் நிவேதனம் முதலான ஆராதனங்கள் செய்யப்பட்டு வித்வான்களுக்கும் மற்றுமுள்ள மகாஜனங்களுக்கும் சந்தனம் தாம்பூலம் பிரசாதங்களும் வழங்கி விமர்சையாய் உத்ஸவம் முடிவுபெற்றது. சுபம் ஈசுவரய்யர்.

## கோவில் வீரட்டானம் ஆர்யதர்மாபிவர்த்தனி பிராம்மண மஹாசபை.

---

ஷை சபையின் சார்பாக 1—2—31வல் அம்மணூர் வித்வான் ப்ரம்மஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்கள் விஜயம் செய்து பகல் $3\frac{1}{2}$ மணிக்கு ஸ்ரீ பிரகன்னாபிகா சந்நிதி மண்டபத்தில் 'ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளுடைய சரித்திரத்தைப்பற்றி உபந்யாஸம்செய்ய ஆரம்பித்தார்கள். சில அத்யாயங்கள் சொல்லப்பட்டு முடிவடையும் சமயத்தில் சபையோர்களின் வேண்டுகோளின்படி ஸ்ரீ சங்கரவிஜயத்தை (4) நான்கு தினங்களில் உபந்யாஸம் செய்து முடிப்பதாய் சாஸ்திரிகள் வாக்களித்தார். தற்சமயத்தில் அகஸ்மாத்தாய் (கொடிமுடி) ப்ரம்மஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகள் விஜயம்செய்து சில மதரகஸ்யங்களைஎடுத்துக்கொண்டு அரைமணிநேரம் உபந்யசித்தார். பிறகு 6-மணிக்கு ஸபைகலைந்தது.

எல்லோரும் சந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு ஸ்ரீ அம்பாள் ஸந்நிதிக்கு விஜயம் செய்தார்கள். ஷை ராஜகோபால சாஸ்திரிகளவர்களால் யாரோசில வித்வான்கள் அத்வைத மதத்தைப்பற்றி தூஷித்து கண்டனம் செய்தார்களென்றும் ஷை மதம் அவைதிகமதம் என்றும்தான் சொல்லக்கேட்டு அடங்கா மனவருத்தத்துடன் தான் வந்ததாயும் சொல்லிவிட்டு பிறகு மதரகஸ்யங்களையெல்லாம் விஸ்தாரமாய் உபன்யஸித்து அத்வைத மதமே எல்லாற்றிற்கும் சிறந்ததென்றும் ஒருவராலும் தள்ளத்தகாததென்றும் இதரமதங்களைப்பற்றி குறைகூடாதென்றும் வேத முதலிய மேற்கோள்களைக்கொண்டு $1\frac{1}{2}$ மணிநேரம் உத்வேகமாய் உபந்யஸித்து மற்றும்பல இடங்களிற் சென்று ஷை மதத்தைப் பற்றி உபந்யஸிக்கப்(தான்)போவதாயும் சொல்லிமுடிக்க $8\frac{1}{2}$மணிக்கு வந்தனோபசாரத்துடன் சபை கலைந்தது.

2—2—31-ல் மாலை $6\frac{1}{2}$ மணிக்கு ஷை சபை துவக்கப்பட்டு அம்மணூர் சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீ சங்கரவிஜயத்தில் விட்டதி லிருந்து ஆரம்பித்து $8\frac{1}{2}$ மணிவரையில் உபந்யசித்தார்கள். 3—2—31 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு ஆரம்பித்து முறையே உபந்யாசம் நடைபெற்றது. 4-2-31-ல் இரவு 7மணிக்கு ஆரம்பித்து ஸ்ரீசரித்தி ரத்தில் பாக்கியிருந்ததை பூராவையும் அதிவிமரிசையாகவும் ஸ்ரீ குருவினிடத்தில் செலுத்தவேண்டிய பக்தியைப் பாமரர்கள் மனத்திலும் பசுமரத்தாணிபோல் பதியுமாறு ப்ரஸங்கித்தார்கள். பிறகு ஸ்ரீ பகவத்பாதாளுடைய படங்களை வைத்து அலங்கரிக்கப் பட்டு ஸ்ரீ சங்கராசார்யாள் அஷ்டோத்திரம் வாசித்து அர்ச்சனை செய்யப்பட்டு சர்க்கரை பழங்கள் முதலியவைகள் நிவேதனம் செய்யப்பட்டு கற்பூர தீபாராதனைகள் செய்யப்பட்டது. பல கன வான்களும் வக்கீல் முதலிய உத்தியோகஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஷை சபையில் விஜயம் செய்திருந்தவர்களு க்கு சந்தனம், தாம்பூலம் சர்க்கரை, பழம் முதலியவைகள் வினி யோகம் செய்யப்பட்டது. பிறகு ப்ரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களு க்கு மாலைபோட்டு கிஞ்சித் சம்பாவனைசெய்து எல்லோராலும் நமஸ்கரிக்கப்பட்டு மந்திராக்ஷதை பிரசாதம் முதலியவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தனோபசாரத்துடன் இரவு10மணிக்கு சபை இனிது முடிந்தது. சுபம் K. R. சுப்ரமண்ய சாஸ்திரி.

## வாரவிருத்தாந்தம்.

நமது வைரி:-பரமசுகமான மோக்ஷஸாம்ராஜ்யத்தையடைய விட்டாத நம் சத்ரு யார்? என பார்த்தன் பார்த்தஸாரதியான பகவானை வினவினான். காமம் குரோதம் என கண்ணன் பதில் உரைத்தார். என்று பத்திரிகையைப்பிரித்தாலும் கொலையில்லாத தினமில்லை. இக்கொலைகளுக்கு காரணம் யாதென பார்க்கும் போது காமம் அல்லது குரோதமாகவே காணப்படுகிறது. சென்ற வாரத்தில் காமத்தினால் தனது தோஷத்தைத் தனயன் ஸஹிக்க வில்லையென தாயும் சகோதரியுமாகச் சேர்ந்து புத்ரனை (27-வய துள்ள ஜகதீசுவர முதலியை)க் கொன்றனர். இது குடியாத்தம் புலித்தொகை கிராமத்தில் நடந்த ஸம்பவம். கோபத்தினால் ஒரே ராத்திரியில் உள்ளே புகுந்து மதுரை திப்பம்பட்டி என்ற கிராமத்

தில் அவ்வூர் கிராமமுன்ஸீப் பரிவாரத்துடன்13பேர் கொல்லப்பட்டனராம் என்ன கோபம்! என்னகாமம்! இவைகளையகற்ற எல்லா ஜனங்களுக்கும் புராணக் கதைக் கூறுதல் நலம். திருநெல்வேலியில் ஊரார்மேல் பழிவைக்க $1\frac{1}{2}$-வயது தன் குழந்தையை தகப்பன் கொன்றுனும்.

கோண்டாட்டம்:- எல்லா இந்தியர்களது எதிர்ப்பையும் மதியாது இந்திய அரசாங்கத்தார் புது டில்லியில் 15-கோடி ரூபாய் செலவழித்து கட்டடங்கட்டிநேற்றைய செவ்வாய்க்கிழமை அஷ்டமியன்று கிரஹப்ரவேசம் செய்தனர். பலஅரசாங்கமங்குநிலைக்கவில்லை என்று சிலர் சொல்கின்றனரென்பதை நிராகரித்து அதே சமயத்தில் தனது வழக்கமான செவ்வாய்க்கிழமையை மறவாமல் வெள்ளையர் சுபதினமாகக் கருதினர். ஏழை இந்தியருக்கு இக் கொண்டாட்டம் திண்டாட்டமாம். இதைக்கண்டாவது நம்மவர் வழக்கத்தைக் கைப்பற்றுவரோ ?

மோஹம்:— அவரவருக்கேற்றபடி பஜகோவிந்தம் முதல் பாஷ்யம் வரை பரமாசாரியாள் அத்வைத வேதாந்த ரஸத்தை உலகிற் கூட்டினர். இதில் ஏகதேசசத்தை உணர்ந்து ஆங்கில பாஷையில் கூறும் ஸ்ரீ ராதாக்ருஷ்ணன் என்பவரை ஆங்கில உலகுஆதரவுடன் வரவேற்கிறது. இதுவரை நமக்கும்ஸந்தோஷமே. பாஷா மோஹம் நீங்கி ஆர்யபாஷையைக் கற்று நேராக அத்வைதாம்ருதத்தைப் பருகலாகாதோ ?

ஏமாராதீர்கள்:— அபூர்வமான அனேக கிரந்தங்கள் ஓலைச் சுவடியில் எழுதப்பட்டு முற்காலத்தவரால் உபயோகிக்கப்பட்டு வந்தன. காலத்தின் கோலத்தால் அவைகளின் உபயோகத்தை உணராமல் பலர் அற்பவிலைக்கு அன்னியருக்கும் செல்லுக்கும் அர்ப்பணம் செய்கின்றனர். நேபாள தேசத்திலுள்ள புத்தகங்களை அன்னியர் கொண்டுபோகலாகாதென 100-வருஷமாக ஓர் சட்டமிருக்கிறதாம். ஆங்குள்ள "தாபஸவத்ஸராஜன்" என்ற நாடகம் அத்தேசத்தைவிட்டு அகன்றதாம். ருஷ்யராஜாங்க வாசகசாலையில் அதுஇப்போதுகாணப்படுகிறதாம். ஜர்மனிஅமெரிக்காமுதலிய நாடுகள் நம் நாட்டுக் கிரந்தரத்னத்தைக்கொண்டு சென்றன. இனியாவது அத்தகைய நூல்களை ஜாக்கிரதையாககாப்பாற்றுங்கள்

பித்தந்தேளியுமோ? அம்பாஸமுத்திரத்தில் சிலர் கூடி, வரும் ஜநகணிதத்தில் ஜாதிக்குரிய பட்டங்களை விட்டுவிடவேண்டும். விதவைகள் விவாஹம் செய்துகொள்ளவேண்டும். பெண்களுக்கு பூர்ண சுதந்தரம் தரவேண்டும் என தீர்மானித்தார்கள். இம் மூன்று விஷயத்திலும் நம்தேசாசாரமே சிறந்ததென, எந்த ஆசார்யனிடமிருந்து நமதாசாரம் தப்பென கற்றேமோ அதேமேனாட்டு ஆசார்யாள் கொண்டாடுகின்றனர். நம்மவருக்கு இப்பித்தம் தெளிவது எப்போது?

இவரன்றோ பக்தர்- நடியாடு என்னும் வடநாட்டில் "ஸங்தாராம்" என ஓர் மகோத்ஸவம் நடந்தது. லக்ஷம் ஜனங்கள் கூடியிருந்தனர்- 4 லக்ஷரூபாய் நெய்ஹோமம் செய்யப்பட்டதாம். பகவானுக்கு அபிஷேகம் செய்யும் பாலை எழைக்குழந்தைகளுக்கு கொடுப்பதால் தர்மமில்லையா? நெருப்பில் நெய்யைக் கொட்டுவதேன் என நாஸ்திகம் பேசுமிக்காலத்தில் இவ்வளவு ஹோமம் செய்தவரன்றோ பக்தர் ? நம்நாட்டில் பித்ரு சிரார்த்தத்தன்று கர்னமுட்டை நெய்யுக்கு அக்னிபகவான் தவங்கிடக்கிறார்?

சொல்லொன்று:- ஆசார்ய ராதாகிருஷ்ணன் வேதாந்தத்தில் தற்கால உலகால் நன்கு மதிக்கப்பட்டவர், சிதம்பரத்தில் செய்த உபன்யாசத்தில் நமது நாட்டு வேதாந்தக்கொள்கைகளையும் ஆசாரங்களையும் மேனாட்டு நாகரீகம் கொள்ளை கொண்டதென கண்ணீர் விட்டார். உடனே அதே கட்டிடத்தில் நடந்த எல்லோரும் கலந்த தேக்கச்சேரி அத்துக்கத்தை அகற்றியதுபோலும். சொல்லொன்று செயல்வேறு இல்லாதார் இன்னும் அதிகம் அதிகப்படுவர். உண்மை அனுஷ்டானத்தினால் தான் ஆத்மலாபம் பெறலாம்.

உறங்கலாகாது:-ராஜாபகதூர் கிருஷ்ணமாசாரியார் சாரதா பில்லை ஒழிக்க ஓர் பில்லை தயார் செய்து நம் ஸஹாயபலத்தைஎதிர்பார்க்கிறார், சென்னை கும்பகோணம், திருநெல்வேலி, மேலட்டூர், நான்கிடத்தில் சபை நடந்து இதை ஆதரித்தது. முன்போல்வீணோ என அஞ்சி சிலர் கூட்டம் கூடாமலிருக்கலாம். நம்முயற்சியை விடலாகாது. உறங்காதீர்கள். எழுங்கள ! சபைகூட்டி அதை ஆதரியுங்கள்.

போதாது:- நாங்குனேரி என்ற ஊரில் ஓர் ஸனாதன தர்ம சபை தோன்றியதைக்கொண்டு ஸந்தோஷித்தோம். இது போதுமோ ? ஊர் ஊராய் ஸபைத்தோன்றல்வேண்டும். தோன்றியவை வேலை செய்தல் வேண்டும்.

இங்கும் அங்கும் நமக்குள்தான் ஜாதிச் சண்டை என சிலர் சொல்வர். பாலஸ்தீனத்தில் யூதருக்கும் மற்றவருக்கும் யுத்தம். காசியில் இந்து முஸ்லீம் சண்டை. மதக்கல்வி உள்ளத்தில் ஊறினாலன்றி சண்டை ஒழியுமோ?

ஸத்ஸபைகள் ஸபை என்பதற்கு பாரதங்கூறியபொருளுள் எவை நாகை ஹிந்துமதாபிமான ஸபையும். குடந்தை வக்கீல் குமாஸ்தா ஸபையுமே. முன்னது ஓயாது ஸத்விஷய உபன்யாசத்திலீடுபட்டது. பின்னது லௌகிகசபையேயாயினும் அப்பப்போது பரமாசார்யாளது அநுக்ரஹத்திற்கு பாத்திரமாகிறது.

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவசர்மா.